**மாகாண வீதிகள் அபிவிருத்திச் செயற்திட்டம் (மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்கள்) 2010 செப்டெம்பர் 01 இலிருந்து திசெம்பர் 31 வரை**

## 1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த நான்கு மாத காலத்திற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்), கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.